

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி கோரிக்கை மனுக்கள் பெறும் நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒரு மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு 8 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் ரூ.25 ஆயிரம் திருமண நிதி உதவித் தொகையினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், நகர்மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் உள்ளனர்.



பத்மஸ்ரீ டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் 89 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு திருச்செந்தூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும் தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம். சி.சண்முகையா மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகர் மன்றத் தலைவர் திருமதி சிவ. ஆனந்தி,துணை நகர் மன்ற தலைவர் செங்குழி.ஏ.பி.ரமேஷ்,பில்லா ஜெகன்,திருச்செந்தூர் அ/மி சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் அருள் முருகன், நகரச் செயலாளர் வாள் சுடலை,நகர் மன்ற உறுப்பினர்கள் 14 வது வார்டு ரேவதி கோமதிநாயகம்,16வது வார்டு ஆனந்த்,மணல்மேடு சுதாகர், மணிகண்டன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வகுமார்,மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் வீரபாகுமற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சேலம் மாநகராட்சியில் - ரூ 14.54 கோடி மதிப்பில்

# மோட்டார் பம்புகள் - மாறும் சுழற்சி இயக்கிகள் சீரமைப்புப் பணிகள்!

## முதல்வர் உத்தரவு! குடிநீர் வழங்கல் துறை தகவல்!

சேலம், செப்.25-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள மோட்டார், பம்புகள் மற்றும் மாறும் சுழற்சி கொண்ட இயக்கிகளை (Variable frequency drive) மறு சீரமைக்கும் பணியை ரூ.14.54 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டம் தொட்டில்பட்டியில் ரூ.350.00 கோடி மதிப்பீட்டில் 2014ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மேட்டூர் அணையிலிருந்து நாள் ஒன்றுக்கு 135 MLD நீரேற்றம் செய்யப்பட்டு சுத்திகரிப்பு செய்து மாநகர மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது, தனிக்குடிநீர் திட்டம் துவங்கி 10 ஆண்டுகளுக்கு மேல் ஆன நிலையில், அங்குள்ள மோட்டார், பம்புகள் மற்றும் மாறும் சுழற்சி கொண்ட இயக்கிகளை (Variable frequency drive) மறு சீரமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப மாநகர மக்களுக்கு தேவையான 155 MLD குடிநீரை தங்குதடையின்றி ஒரே சீரான அளவில் வழங்க வேண்டியுள்ளதால், தனிக்குடிநீர் திட்டத்தில் தொட்டில்பட்டியில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணி, 155 MLD திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தும் பணி, சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையத்தினை மேம்படுத்தும் பணி மற்றும் தனிக்குடிநீர் திட்டத்தில் கோம்புரான் காட்டில் அமைந்துள்ள சுத்திகரிக்கப்பட்ட நீருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணி ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள மோட்டார், பம்புகள் மற்றும் மாறும் சுழற்சி கொண்ட இயக்கிகளை (Variable frequency drive) மறு சீரமைக்கும் பணியை ரூ.14.54 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

சேலம் மாநகராட்சியின் தனிக்குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள மோட்டார், பம்புகள் மற்றும் மாறும் சுழற்சி கொண்ட இயக்கிகளை (Variable frequency drive) மறு சீரமைக்கும் பணிகளை மேற்கொள்வதன் மூலம், சேலம் மாநகர மக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகத்தினை சீராக வழங்க இயலும். எனவே, இப்பணி மாநகர மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அமையவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 [அ]வட்ட கழக சார்பாக பொது உறுப்பினர்கள் கூட்டம் 22 9 2024 அன்று ராயப்பேட்டை கேசர் திருமண மண்டபத்தில் வட்டச் செயலாளர் சி.வாசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் பகுதிச் செயலாளர் ஏர்.ஆர்.பி.எம்.காமராஜ், மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, மருத்துவர் சுபேர்கான், மாமன்ற உறுப்பினர் கமலாசெழியன், வி.என். ராஜன், ரவிராஜ் குமார், இ.இளம்பாரதி, லைனர்.கே.பிரபு, க.வே.மோகன், ஏ.பி.வேலு, சித்தராசெழியன், வே.சௌந்தர், எம்.எஸ்.வசந்த், சா.ரமேஷ், ஆர்.ராதா, டி.ஜெபஸ்டின், கோ.தனசேகர், ஜெ.அன்பு, க. ரவி. எ.காமாட்சி, கோ.மகேஷ் கலந்து கொண்டனர்.






### இலங்கையில் புதிய அரசு பதவியேற்றிருக்கும் நிலையில் ஒன்றிய அரசு இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு

# இலங்கைக் கடற்படைக்கு கடிவாளம் போட வேண்டுமென்பதே தமிழர்கள் எதிர்பார்ப்பு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப்.25-

இலங்கையில் புதிய அரசு பதவியேற்றிருக்கும் நிலையில் ஒன்றிய அரசு இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு இலங்கைக் கடற்படைக்கு கடிவாளம் போட வேண்டுமென்பதே தமிழக மீனவர்கள் மட்டுமின்றி ஒட்டு மொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பாகும் என்று “தினகரன்” நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது. அது வருமாறு:-



தினகரன்
செப்டம்பர் 24, 2024 செவ்வாய்க்கிழமை
கடிவாளம் வேண்டும்
தமிழக மீனவர்கள், எத்தனை காலத்துக்கு செத்து செத்து பிழைப்பது. இந்திய குடிமக்களை காப்பாற்ற வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறதா, இல்லையா என கேள்வி எழுகிறது. ஒவ்வொரு வாரமும் மீனவர்களை கைது செய்வதும், பல லட்சம் மதிப்புள்ள வலைகள், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது.
தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பறிக்கப்பட்டால் அவர்கள் வாழ்வது எப்போது? அவர்களின் குடும்பத்தின் நிலை பரிதாபத்துக்கு உள்ளாகிறது. கடந்த 10ம் தேதி நாகை மாவட்டம் ஆற்காட்டுத்துறையை சேர்ந்த மீனவர்கள் பைபர் படகில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் நாகை மீனவர்களின் படகின் மீது மோதி தாக்குதல் நடத்தி உள்ளனர். மேலும் படகில் ஏறியும் ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். 5 லட்சம் மதிப்புள்ள 700 கிலோ

தமிழக மீனவர்கள், எத்தனை காலத்துக்கு செத்து செத்து பிழைப்பது. இந்திய குடிமக்களை காப்பாற்ற வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறதா, இல்லையா என கேள்வி எழுகிறது. ஒவ்வொரு வாரமும் மீனவர்களை கைது செய்வதும், பல லட்சம் மதிப்புள்ள வலைகள், படகுகளை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பறிக்கப்பட்டால் அவர்கள் வாழ்வது எப்போது? அவர்களின் குடும்பத்தின் நிலை பரிதாபத்துக்கு உள்ளாகிறது. கடந்த 10ம் தேதி நாகை மாவட்டம் ஆற்காட்டுத்துறையை சேர்ந்த மீனவர்கள் பைபர் படகில் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

நடுக்கடலில் மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் நாகை மீனவர்களின் படகின் மீது மோதி தாக்குதல் நடத்தி உள்ளனர். மேலும் படகில் ஏறியும் ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.5 லட்சம் மதிப்புள்ள 700 கிலோ வலைகளை பறித்துக் கொண்டு மீனவர்களை விரட்டி அடித்துள்ளனர். இந்த தாக்குதலில் 4 மீனவர்கள் காயம் அடைந்தனர். இந்த சம்பவம் குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் தனுஷ்கோடி கடல் பகுதியில் மீன் பிடித்து கொண்டிருந்த மீனவர்களை தடுத்து நிறுத்திய இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி, ஒரு விசைப்படகையும் அதில் பயணித்த 8 மீனவர்களையும் சிறை பிடித்து சென்றனர். வழக்கம் போலவே இந்திய அரசாங்கம், டெல்லியில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளை அழைத்து, “தமது அதிர்ச்சியையும் மிகுந்த வேதனையையும்” தெரிவிக்கிறது. ஏற்கனவே 50க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை சிறையில் வாடி வருகின்றனர்.

கடந்த 5 ஆண்டுகளில் இலங்கை கடற்படை பறிமுதல் செய்த 185 விசைப்படகுகள் இன்னும் மீட்கப்படவில்லை. தற்போது நாட்டு படகுகளையும் குறி வைத்து தாக்கப்படுவதும் அல்லது மோதி மூழ்க செய்வதுமான இலங்கை கடற்படையின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க வேண்டும் என கோரிக்கை வைத்து தமிழக மீனவர்கள் போராடி வரும் நிலையில், நேற்று நெடுந்தீவு அருகே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 மீனவர்களை கைது செய்து ஒரு படகையும் பறிமுதல் செய்துள்ளது.

இதற்கும் ஒருபடி மேல் சென்று கடந்த ஜூன் 25ம் தேதி நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 10 மீனவர்களை கைது செய்து, கொலை வழக்கு பதிவு செய்தது தமிழக மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவர்களது படகு மோதி இலங்கை கடற்படை வீரர் ரத்நாயக உயிரிழந்ததாக காங்கேசன் துறை காவல் நிலைய போலீசார் கூறுகின்றனர்.

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அதில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்களுக்குத்தேவையான சட்ட உதவிகளை வழங்க வேண்டும். அதிகளவில் அபராதம் விதிப்பதை தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

இந்நிலையில் இலங்கையின் 9வது அதிபராக அனுர குமார திசநாயக நேற்று பதவியேற்றுக்கொண்டார். புதிய அரசு அமையும் போது இந்தியா அரசு ராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்டு இலங்கைக் கடற்படைக்கு கடிவாளம் போட வேண்டும் என்பதே மீனவர்கள் மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் மாமனார்

# உமாசங்கர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, செப்.25-

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் மாமனார் உமாசங்கர் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் அவர்களின் மாமனார் கே. உமாசங்கர் (வயது 68) அவர்கள் உடல்நலக்குறைவால் நேற்று (23.9.2024) மாலை உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரை இழந்து வாடும் குமரகுருபரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### சேலம் மாவட்டம் - வெள்ள கவுண்டனூரில்

# ரூ.15 கோடி மதிப்பிலான கோயில் சொத்து மீட்பு!

## இந்து சமய அறநிலையத் துறை நடவடிக்கை!

சேலம், செப். 25 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுபாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் நேற்று (24.09.2024) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், மொரசம்பட்டி வெள்ள கவுண்டனூர் வரதராஜபெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.15 கோடி மதிப்பிலான 9.27 ஏக்கர் நிலங்கள் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம் ஆகியவை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது.

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ள கவுண்டனூர், வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமாக வெள்ளரி கிராமத்தில் அமைந்துள்ள 9.27 ஏக்கர் நிலங்கள் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அதில் 12,675 சதுரடி பரப்பளவில் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிட சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் படியும், சேலம் மண்டல இணை ஆணையர் உத்தரவின்படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சேலம் உதவி ஆணையர் கே.ராஜா தலைமையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்கள் முன்னிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்நிலங்கள் முழுவதுமாக அளவீடு செய்யப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட நிலங்களின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.15 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) பாலாஜி, பரம்பரை அறங்காவலர்கள் ஜே. கிரிதரன், ரவிச்சந்திரன், காவல் ஆய்வாளர் திருமதி எஸ்.பேபி, செயல் அலுவலர் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.



திருவொற்றியூர் மத்திய பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளரும் இரண்டாவது மண்டல குழு தலைவருமான டாக்டர் ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., சிறப்புரை ஆற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக செயலாளர்கள் சாலை டி.கணேசன், மு.செல்வம், வ.முத்துசாமி, த.ச.கரிகால சோழன், ஆர்.டி.ரமேஷ், வி.ஜி.தினகரன், எம்.எஸ்.நாகலிங்கம், துர்கா கோதண்டம், கிருஷ்ணமூர்த்தி, விஜயரங்கன், செல்வராஜ், ஞானமூர்த்தி, சஞ்சீவி, ஸ்ரீதர், மற்றும் கழக முன்னோடிகளும், இளைஞரணி, மகளிர் அணி, மாணவர் அணி, கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.